**வடமத்திய மாகாண சபை - 2020 ஆம் ஆண்டு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமத்திய மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2021 திசெம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 27 ஆந் திகதி பிரதான வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் வட மத்திய மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களின் பட்டோலை 04.2 இல் மாகாண கூட்டுறவு அமைச்சினால் 2109 என்ற மூலதன செலவின விடயத்தின் கீழ் செலுத்த வேண்டிய செலவினமாக ரூபா 1,780,000 காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மாகாண கூட்டுறவு அமைச்சின் 2020 ஆம் | ஏற்றுக்கொள்கின்றோம். | வடமத்திய மாகாண சபையின் அமைச்சு / திணைக்களங் களினால் தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்கள் மற்றும் அவற்றுக்குரிய ஏனைய சகல பதிவேடுகளினதும் தகவல்கள் மாகாண சபையின் நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் என்சீபீ-பீரீஜீ(5) படிவத்திலான பொறுப்புக் கூற்றில் அந்த பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் இணக்கம் செய்யப்படாத வேறுபாடு ரூபா 1,780,000 ஆகும். | | கூற்றுக்களில் தகவல்களுக்கு சமமானதாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 06 இல் உட்கட்டமைப்பு, பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல்களின் கூட்டுமொத்தம் ரூபா 60,609,592 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும் அமைச்சு/ திணைக்களங்களின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் அகற்றல்களின் கூட்டுத்தொகை ரூபா 50,283,576 ஆக இருந்தமையின் காரணமாக இணக்கம் செய்யப்படாத வேறுபாடு ரூபா 10,326,016 ஆக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வடமத்திய மாகாண சபையின் அமைச்சுக்கள் / திணைக்களங்களினால் தயாரிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களுடன் இணக்கம் செய்து மாகாண சபையின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 01 இன் பிரகாரம் மாகாண அமைச்சுக்கள்/ 04 திணைக்களங்களுக்குரிய வடமத்திய மாகாண திறைசேரிக்கு தீர்க்கப்படாதிருந்த ரூபா 27,860,867 தொகையான கட்டுநிதி மீதி 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்பட்டிருந்தது. அந்த மீதியில் 95 சதவீதமானது 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 26,405,861 மீதியொன்று பிரதம அமைச்சினால் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு / திணைக்களங்களின் சேமிக்கப்பட்ட கட்டுநிதி மீதி அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதியில் அல்லது மாகாண திறைசேரியினால் குறிப்பிடப்படுகின்ற தினத்தில் மீள தீர்க்கப்படல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான

எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும். வேண்டுமென்று விட்டுவிடுதல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான விட்டுவிடுதல்கள் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்க்க் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 தலைப்பு 600 -வடமத்திய மாகாண ஆளுநரின் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சனாதிபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய PS/CSA/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண ஆளுநருக்கு ஒதுக்கப்படுகின்ற ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 02 ஆக இருந்ததுடன் | 05 அமைச்சர்களின் பணிப் பொறுப்புக்களையும் ஆளுநரின் பணிப்பொறுப்பில் ஆளுநர் தனியாக நிறைவேற்றுவதற்கு ஏற்பட்டிருந்தமையால் மேலதிக வாகனங்களை பயன்படுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. | சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் வாகனங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேவையேற்படுமாயின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு வாகனமொன்று வழங்க முடியுமாக இருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2020 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையில் 05 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண ஆளுநர் செயலகத்தில் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் ஒரு வெற்றிடம் மற்றும் ஆரம்ப நிலையில் ஒரு வெற்றிடமும் ஆக 04 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 601 - வடமத்திய மாகாண சபை மற்றும் மாகாண சபை செயலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண சபை மாகாண சபை செயலகத்தில் சிரேஷ்ட நிலையிலும், இரண்டாம் நிலையிலும் ஒரு வெற்றிடம் வீதம் 02 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையில் 05 ஊழியர்களின் மிகையும் காணப்பட்டது. எனினும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கும் மற்றும் மிகை ஊழியர்களுக்காக பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் மிகையான பதவியணியினர் களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 602 - வடமத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவில் சிரேஷ்ட நியையில் 02 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.4 தலைப்பு 610 - வடமத்திய மாகாண பிரதம அமைச்சு மற்றும் வடமத்திய மாகாண சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட செயற்திட்டங்கள், சுற்றுலாக் கல்வி, தகவல் தொழிநுட்பம், பொறியியல் நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண பிரதம அமைச்சுக்குரிய தீர்க்கப்படாதிருந்த ரூபா 26,405,861 தொகையான கட்டுநிதி மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பான கட்டுநிதி மீள தீர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாணத்தின் சுற்றுலா செயற்திட்டத்தின் மேம்பாட்டை நோக்காகக் கொண்டு தொழில்நுட்ப நியமமொன்றுடைய அறிக்கையிடல் காணொளி நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல், கவர்ச்சிகரமான படங்களுடன் நியமத்தை உடைய புத்தகமொன்றை வடிவமைத்தல் மற்றும் முறையான தகவல்களுடன் இணையத்தளமொன்றை வடிவமைப்பதற்காக பிரதம செயலாளரினால் தனியார் | ஏற்றுக்கொள்கின்றோம். குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை மீறியமை தொடர்பாக உள்ளக பரிசோதனை யொன்றை நடாத்துதல் மற்றும் இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமலிருப்பதற் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குனருடன் ரூபா 15,797,500 தொகையில் 2016 மார்ச் 23 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் ரூபா 12,144,500 தொகை 2016 திசெம்பர் 26 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்த போதும், 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் வழங்குனரால் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வடமத்திய மாகாணத்தின் சுற்றுலா செயற்திட்டத்தின் மேம்பாட்டு நோக்காகக் கொண்டு ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | | கான ஏற்பாடுகளை வழங்குதல். |
| (இ) | அளுத்கம குமார மகா வித்தியாலயத்தின் அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் சிறிய மற்றும் பாரியளவிலான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 39,791,666 தொகையில் பிரதம அமைச்சரினால் ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. சாத்தியவள ஆய்வின்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக சிறிய மற்றும் பாரியளவிலான திருத்த நடவடிக்கைகளுக்காக மாற்றமடையும் வேலையின் கீழ் ரூபா 3,876,335 தொகையும், பிரதான நிர்மாணத்திற்காக மாற்றமடைகின்ற வேலையின் கீழ் ரூபா 10,926,181 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் முறையே ரூபா 6,521,836 மற்றும் ரூபா 33,269,830 தொகையான மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் முறையே 59 சதவீதம் மற்றும் 33 சதவீதமாக இருந்தது. | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்திற்குரியதாக வழங்கப்பட்ட Type Plan இன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தமையால் இந்த முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. | சாத்திய வள ஆய்வு மற்றும் பாடசாலைகளின் தேவையை இனங்கண்டு கட்டிடங்களை திட்டமிடல் (Plan) தயாரித்து மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணித்து கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 4000 நபர்களுக்கு மேற்பட்ட தரப்பினருக்கு இருக்கைகளை வழங்க முடியுமான கேட்போர் கூடத்திற்கான தேவையொன்று இன்றி மற்றும் நிதிஏற்பாடுகளின்றி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பளுகஸ்தமன மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 542,019,300 தொகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு நிர்மாணிப்பதற்காக (Design and Build) பிரதம அமைச்சின் செயலாளரால் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறே மாகாண நிதி விதி 418.2 இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் கட்டம் கட்டமாக உடன்படிக்கை செய்யப்பட்டு அமுல்படுத்துவதற்காக பெறுகைக் குழு தீர்மானித்திருக்கும் போது முழு செயற்திட்டமும் ரூபா 542,019,300 தொகையில் அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி ரூபா 100,000,000 வேலை ஆரம்பித்தல் முற்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 மே 07 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மாகாண நிதி விதி 46.2.2 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு வருடாந்த நிதி ஏற்பாட்டை விஞ்சுகின்ற போது பொறுப்புக்களுக்கு கடப்பாடுகள் ஏற்படுத்த முடியும். | இந்த செயற்திட்டத்திற் குரிய மொத்த கிரய மதிப்பீடும் வருடாந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கப்படாமை யினால் நிதிஏற்பாடு இன்றி செலவினங்களை செய்வதற்கான அதிகாரத்தை வழங்குவதற்கு எந்தவொரு அதிகார தரப்பினரும் அனுமதி வழங்காதிருந்த மையால் இது தொடர்பான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | “அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்” இன் கீழ் நேகம முஸ்லிம் வித்தியாலயத்தின் பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய சிட்டைகளின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 7,663,843 ஆக இருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 9,695,499 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு | பெறுமதி சேர் வரியை சீராக்கும் போது ஒப்பந்த நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 1,410,374 ஆகும். ஒப்பந்தகாரரிடமிருந்து பணத்தை அறவிட்டதன் பின்னர் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | மேலதிக செலுத்துதல்கள் அறவிடப்படல் வேண்டும். பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக விசாரணை நடாத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,031,656 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த மேலதிக செலுத்துதல்களுக்கான பெறுமதிசேர் வரி ரூபா 320,731 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ‘‘அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்’’ இன் கீழ் பளுகஸ்தமன மகா வித்தியாலயத்தின் சிற்றுண்டிச்சாலையை நிர்மாணிப்பதற்காக 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ரூபா 10,298,211 தொகையான (வற் இன்றி) தொகையில் பிரதம அமைச்சின் செயலாளரினால் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் 30 சதவீதமான ரூபா 3,089,463 வேலை ஆரம்பித்தல் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 28 ஆந் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், முற்பண பிணை முறியை பணமாக்கி வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகை அறவிடப்படாதிருந்ததுடன் 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்ததன் பின்னரும் ஒப்பந்தகாரரினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய ஒப்பந்தங்களுக்காக செலுத்துவதற்கு இருந்த தொகையிலிருந்து அந்த முற்பணத் தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்பட்ட ஏனைய இரண்டு ஒப்பந்தங்களுக்குரிய கொடுப்பனவுகளிலிருந்து 2020 மே மாதத்தின் போது இந்த முற்பணத் தொகை அறவிடப்பட்டுள்ளது. | ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் இட்டு பெறுகை நடைமுறைகளின் கீழ் இன்னுமொரு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | "அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்" இன் கீழ் நல்லச்சிய ஆரம்ப பாடசாலையின் 04 கட்டிடங்களை திருத்துவதற்காக ஒப்பந்தகாரர் ஒருவருடன் ரூபா 4,943,744 பெறுமதியில் 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் ஆசிரியர் விடுதிகள் மற்றும் மேலும் ஒரு கட்டிடத்தின் பழுதுபார்த்தல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த 02 கட்டிடங்களினதும் திருத்த வேலைகள் 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அந்த ஒப்பந்தகாரருக்கு எதிராக உடன்படிக்கையின் பிரகாரம் எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது செயல்முன்னேற்றம் 75 சதவீதம் ஆகும். | நிர்மாணங்களின் தாமதத்திற்காக ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | பிரதம அமைச்சினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது அ/கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலத்தில் ரூபா 11,840,935 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை மற்றும் ரூபா 8,700,703 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆசிரியர் விடுதி தொடர்பாக 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (i) | 2017 திசெம்பர் அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த ஒப்பந்தத்தை முறையாக கையளிக்காமையின் காரணமாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்பாடின்றி காணப்பட்டது. அவ்வாறு காணப்பட்டமையின் காரணமாக ஆசிரியர் விடுதிகளில் | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | குறைபாடுகளை பூர்த்தி செய்து ஆசிரியர் விடுதியினை முறையாக கையேற்பதற்கும் மற்றும் அதனை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்நுழைவதற்கு முடியாத அளவு அதிக காடு வளர்ந்திருந்தமை, உள்ளே உயிரினங்கள் நடமாடியமை, சிற்றுண்டிச்சாலை கூரைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த அகலம் 2 அடி, நீளம் 2 அடி அளவான 75 கூரைத் தகடுகள் மற்றும் வெளியில் பொருத்தப்பட்டிருந்த நீளம் 10 அடி 3 அங்குலம் மற்றும் அகலம் 9 அடி அளவிலான பாரியளவிலான 04 கண்ணாடிகள் (Tempered Glass) என்பன கழன்று காணப்பட்டிருந்தது. | | |
| (ii) | சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்குரிய உடன்படிக்கை செய்யப்பட்ட மதிப்பீட்டில் ரூபா 2,774,170 பெறுமதியான 32 வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமல் அதற்குப் பதிலாக வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் செயலாளர் அங்கீகரிக்காத மேலதிக வேலையின் கீழ் 13 விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,538,503 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சிற்றுண்டிச்சாலையை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்த மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினை விட கூட்டுமொத்தமாக ரூபா 2,515,767 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப மதிப்பீட்டினை விட 27 சதவீத அதிகரிப்பாகும். | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | அங்கீகரிக்கப்படாத மேலதிக வேலைகளை நிறைவேற்றுதல் மற்றும் அதற்காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2016 திசெம்பர் 02 ஆந் திகதி ஆசிரியர் விடுதியை நிர்மாணிக்கும் பணிகளுக்காக பிரதம அமைச்சினால் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 12,180,508 தொகையான மதிப்பீட்டில் 32 சதவீதமான கூட்டுமொத்தமாக ரூபா 3,922,999 ஆன 46 வேலை விடயங்கள் | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | தேவையான வேலைப் பகுதிகள் இனங்காணப்படாமல் ரூபா 3,922,999 கூட்டுத்தொகையான 46 வேலை விடயங்களை மதிப்பீட்டில் உள்ளடக்கியமை |

| | | | |
|---|---|---|---|
| | கைவிடப்பட்டு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | | தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | பிரதம அமைச்சினால் ரூபா 13,790,629 செலவில் நிர்மாணிக்கப்பட்ட அ/கெக்கிராவ திறப்பனை மகாநம வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை சுற்றி வடிகாண் முறைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | மதிப்பீட்டின் 2.1 மற்றும் 2.2 விடயத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் அளவு முறையே 92 சதவீதத்தினாலும் மற்றும் 30 சதவீதத்தினாலும் அதிகரித்தமையின் காரணமாக மைதானத்தை சுற்றி வடிகாண் முறையை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையான ரூபா 11,977,650 பெறுமதி 15 சதவீதத்தினால் விஞ்சியிருந்த போதிலும் மேலதிக வேலைக்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | குறைபாடுகளுடன் மதிப்பீட்டை தயாரித்து, அங்கீகாரம் வழங்கப்படாத மேலதிக வேலைகள் செய்யப்பட்டமை மற்றும் அதற்காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர் களுக்காக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | விளையாட்டு மைதானத்தின் தென் மேற்கு பக்கத்தில் ஒரு மூலையில் இயற்கையாக அமைந்துள்ள கருங்கல் மேல் தெரியும் வகையில் கருங்கல்லுக்கு இரு பக்கமுமம் மாத்திரம் வடிகாண் முறைமை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதனால் விளையாட்டு மைதானத்திற்கு மேல் அமைந்துள்ள தனியார் காணியொன்றிலிருந்து வழிந்தோடி வருகின்ற நீர் விளையாட்டு மைதானத்தில் சேர்ந்து விளையாட்டு | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | விளையாட்டு மைதானத்தின் மேல் அமைந்துள்ள தனியார் காணியிலிருந்து வழிந்தோடி வருகின்ற நீர் விளையாட்டு மைதானத்தில் சேராத வகையில் வடிகாண் முறைமையின் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மைதானத்தின் சில இடங்களில் சேறு நிறைந்து காணப்பட்டது. | | |
| (iii) | வடிகாண் முறைமை நிர்மாணிக்கும் போது Shuttering இற்காக ரூபா 2,766,280 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் வடிகாண் சுவரில் இருபக்கமும் பாரியளவிலான வெடிப்புக்கள் மற்றும் வெளியில் உடைந்திருந்த கொங்கிறீட் பகுதி காணப்பட்டதுடன் சுவரின் உள்ளே மற்றும் வெடித்த இடங்களில் வெளியாகின்ற நீர் வடிகாணில் கசிந்து காணப்பட்டது. | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் வேலைத்தள பொறுப்பு பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட வேண்டியிருந்ததுடன் குறைபாடுகளை பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும். |
| (ஒ) | உலக வங்கி செயற்திட்ட நிதிஏற்பாட்டின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 4,859,999 தொகையான உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் பிரதம அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட அ/கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலய விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வேலி மற்றும் வாயிற் கதவுகள் நிர்மாணித்தல் தொடர்பாக 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | கேள்விதாரருக்கு பிரதம அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட வேலை விடயங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் விரிவான மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாமல் கேள்வி ஆவணங்களில் கூட்டுப்பெறுமதி மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை | ஏற்றுக்கொள்கின்றோம். | எந்தவொரு நட்டமும் ஏற்படுமாயின் அதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்:கு கையளித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிப்பதற்கு தொழில்நுட்ப குழு பரிந்துரை செய்திருந்தது. | | |
| (ii) | வலைவேலி நிர்மாணிக்கும் போது 1.52m உயரமான Gauge 10 இன் வலை (Chain link mesh) 826.2 சதுர மீற்றருக்காக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 767 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 633,695 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் கணக்காய்வு உத்தியோகத்தரினால் பெறப்பட்ட தரக் கட்டுப்பாட்டு சான்றிதழின் பிரகாரம் அதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த Gauge 12 அளவாக இருந்தமையால் அதற்காக ரூபா 253,478 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த வலைகள் மதிப்பீடு செய்யப்பட்ட தரத்தில் இல்லாதிருந்தமையின் காரணமாக அநேகமான இடங்களில் அது பாரியளவில் கிழிந்து சேதமடைந்திருந்தது. | வேலைத் தளத்திற்கு பொறுப்பான பொறியியலாளரிடமிருந்து பதில் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | குறித்த நியமத்துடன் வலையை ஈடுபடுத்தி மீண்டும் வலைவேலி நிர்மாணிக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் சுற்றுலா விடுதி 2020 ஆம் ஆண்டில் 02 கட்டங்களின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 3,898,452 தொகையில் திருத்துவதற்காக 02 சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட போதும், நிதிப் பிரமாணம் 20 இன் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிகாட்டி கோவையின் 3.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நிதி ரீதியான இயலுமை தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்தம் | ஏற்றுக்கொள்கின்றோம். | மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நிதி ரீதியான இயலுமை தொடர்பாக மதிப்பீடு மேற்கொண்டு ஒப்பந்தம் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஔ) | பிரதம அமைச்சினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 32.77 மில்லியன் கிரயமான 05 நிர்மாண செயற்திட்டங்களுக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 15.17 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 35 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பௌதீக செயல்முன்னேற்றம் குறைவான மட்டத்தில் காணப்படுகின்ற செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு அந்த செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | அ/கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடம் மற்றும் ஆரம்ப கற்பித்தல் வள நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 41,451,987 பெறுமதியில் ஒப்பந்தகாரர் ஒருவருடன் 2017 மார்ச் 13 ஆந் திகதி பிரதம அமைச்சின் செயலாளரினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | ICTAD-SBD-2007 இரண்டாம் தொகுப்பின் ஒப்பந்தத்திற்கான நிபந்தனை இலக்கம் 51 இன் நியதிகள் மற்றும் அது தொடர்பிலான குறித்துரைத்த நடைமுறையின் பிரகாரம் வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்துவதற்காக உரிய செயற்திட்ட மேற்பார்வை பொறுப்பு பொறியியலாளரிடமிருந்து பரிந்துரை பெறப்படல் வேண்டும். எனினும், அந்த பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படாமல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 14,508,196 (VAT உடன்) வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் | பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | முற்பணத் தொகையை செலுத்திய உத்தியோகத்தர் களுக்கும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாமல் உள்ள ஒப்பந்தகாரருக்கும் எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தகாரரால் நிர்மாண வளவில் சில அடித்தள குழிகள் மாத்திரம் வெட்டப்பட்டு வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | ரூபா 12,435,596 தொகையான முற்பண பிணைமுறி மற்றும் ரூபா 2,072,600 தொகையான செயலாற்றல் பிணைமுறி என்பன 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை மாத்திரம் செல்லுபடியானதாக காணப்பட்டதுடன் அவற்றின் செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு 58 நாட்களுக்கு முன்னர் ஒப்பந்தகாரர் வேலையை இடைநடுவில் விட்டிருந்தமை கெக்கிராவ பிரதேச பொறியியலாளரால் பிரதம அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட பிணை முறிகளின் செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவற்றை பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிக கடமை நிலைமைகளினால் பயிற்சி பெறாத பதவியணியினர் ஒன்றை சேவையில் ஈடுபடுத்தியமையால் பிணை முறிகளை குறித்துரைத்த காலத்தில் புதுப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | ஒப்பந்தக்காரர் வேலையை இடைநடுவில் விட்டிருந்தமையை தெரிந்திருந்தும் உடனடியாக முற்பண பிணை முறி மற்றும் செயலாற்றல் பிணை முறியை பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கதாத உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இந்த மூன்று மாடி கட்டிட நிர்மாணத்திற்காக பாடசாலையில் காணப்பட்ட 80x20 அளவிலான பழைய கட்டிடமொன்று உடைத்து அகற்றப்பட்டிருந்தமையால் மாணவர்களின் வகுப்பறைத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | புதிய கட்டிடத்தை மிகவும் விரைவாக நிர்மாணித்து மாணவர்களின் வகுப்பறை தேவையினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | ‘‘அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதம அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட அ/கெக்கிராவை திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் விளையாட்டு பார்வையாளர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,542,277 தொகையின் | விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையால் பார்வையாளர் கூடத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்தினை தொடர் வேலையாக்கி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் பூர்த்தி செய்யப்படாத வேலைக்காக கொடுப்பனவு செய்த |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் உடன்படிக்கை செய்திருந்த ஒப்பந்தகாரர் 2017 ஆம் ஆண்டின் போது அந்த வேலையினை ஆரம்பித்திருந்தார். கூட்டுமொத்தமாக ரூபா 1,086,085 பெறுமதியுடைய வேலைப் பகுதியொன்று மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு மேற்கூறப்பட்ட செயற்திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,086,085 தொகை விளைவற்ற செலவினமாக இருந்தது. அதன் போது நிறைவேற்றப்படாத வேலைகளுக்காகவும் ரூபா 63,700 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | உத்தியோகத்தர் களிடமிருந்து அந்த பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (கி) | அ/கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துடன் உள்ள காணியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 5,061,771 பெறுமதியில் 2017 மே 15 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருடன் பிரதம அமைச்சின் செயலாளரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்காக 03 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 7,124,767 தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டில் மண்ணின் அளவிற்கு மேலதிகமாக 5770 மண் கியூப்கள் வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதியான 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் பாடசாலை மாணவர்களின் விளையாடுவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த விளையாட்டு மைதானத்தை செப்பனிடுவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 7,124,769 தொகை விளைவற்ற செலவினமாக இருந்தது. | செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையால் விளையாட்டு மைதானத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | போதியளவான நிதியேற்பாடு இல்லையாயின் மாகாண நிதி விதி 46.1 இன் பிரகாரம் உடன்படிக்கை செய்ய முடியாதிருந்த மையால் இதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களுக்கும் ஒப்பந்த காரருக்கும் எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்கான அளவிடைப் பத்திரங்கள், வேலை பூர்த்தி அறிக்கை மற்றும் சிட்டைகளுக்கான கொடுப்பனவு பொழிப்புக்களை உள்ளடக்கிய ஆவணங்களின் மூல பிரதிகளின் அடிப்படையில் ஒரு சந்தர்ப்பத்தின் போது மற்றும் அந்த ஆவணங்களின் நிழற்பட பிரதிகளின் அடிப்படையில் இன்னுமொரு சந்தர்ப்பத்தின் போது இரட்டைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையில் இரட்டைக் கொடுப்பனவின் மூலம் மோசடியாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 8,608,290 ஆகும். இந்த முழு பணத்தையும் அறவிடுவதற்கும் இரட்டைக் கொடுப்பனவை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இரட்டைக் கொடுப்பனவின் அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் அறவிடப்படுவதுடன் உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மோசடியாக பெறப்பட்ட ரூபா 8,608,290 தொகை உடனடியாக அறவிட வேண்டியிருந்ததுடன் மோசடி செய்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (கு) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் நிதியேற்பாட்டை பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 21,946,785 ஆன 02 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக ரூபா 9,066,775 வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை தெரிவு கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. எனினும் அந்த முற்பணத்தை அறவிடுவதற்கும் மற்றும் | ஏற்றுக்கொள்கின்றோம். | உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்திசெய்யாதிருந்த ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிடுதல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்திசெய்யாத ஒப்பந்தகாரர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கூ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வடமத்திய மாகாண பிரதம அமைச்சில் சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 37 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 03 வெற்றிடங்களும் ஆக 44 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு** | **இணங்கா மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (கெ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண பிரதம அமைச்சிற் குரிய பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 224,682,194 ஆக இருந்ததுடன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த ரூபா 162,554,132 தொகையான வைப்புக்களை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மீள செலுத்து வதற்கோ | ஏற்றுக் கொள்கின்றோம். | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்புக்களை ஆராய்ந்து மீள செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது அவ்வாறு இல்லையாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கே) | 2017 சனவரி 26 ஆந் திகதிய CSA/1/4 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | | | |
| | 02 ஆவது பந்தி | வெளிநாடு சென்ற குழுக்களின் எண்ணிக்கை 05 இற்கு குறைவாயின் திறைசேரியின் அதிகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் ஜப்பானிற்கு மேற்கொண்ட சுற்றுலாவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை கடிதத்தின் ஏற்பாடுகளை மீறியமை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன் இவ்வாறான மீறல்கள் மீண்டும் ஏற்படாத வண்ணம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| | 03 ஆவது பந்தி | வெளிநாடு சென்ற குழுக்களின் எண்ணிக்கை 05 இற்கு அதிகமாயின் திறைசேரியின் அங்கீகாரம், அதேபோன்று | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை கடிதத்தின் ஏற்பாடுகளை மீறியமை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியில் மேற்கொண்ட சுற்றுலா மற்றும் சிங்கப்பூருக் கான சுற்றுலாவுக்காக 06 உத்தியோகத் தர்கள் வீதம் பங்குபற்றி இருந்த போதிலும் அந்த 02 சுற்றுலாவிற் காக பிரதம அமைச்சினால் சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்க வில்லை. | | இவ்வாறான மீறல்கள் மீண்டும் ஏற்படாத வண்ணம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(கை) வட மத்திய மாகாண பிரதம அமைச்சு நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 இல் 5 ஆம் இலக்க பிரதம அமைச்சு நிதிய விஞ்ஞாபனத்தின் 3(1) ஆம் பிரிவின் மூலம் நிதியத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், பிரதம அமைச்சர் மற்றும் எதிர்கட்சியின் உறுப்பினர்கள் இரண்டு பேர்களை உள்ளடக்கிய 06 பேர்களை கொண்டிருந்த அந்தக் கட்டுப்பாட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் நிதியம், பேணிச் செல்லப்பட வேண்டிய முறைமைகள் விஞ்ஞாபனத்தில் காண்பிக்கப்படாமையினால் | ஏற்றுக்கொள்கின்றோம். | மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் நிதியம் பேணிச் செல்லப்பட வேண்டிய முறைமைகள் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குதல் வேண்டும். |

மாகாண சபை கலைக்கப்பட்ட திகதி முதல் அது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 1.5.5 தலைப்பு 611 - வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்குரியதாக இருந்த தீர்க்கப்படாதிருந்த ரூபா ரூபா 80,000 கட்டுநிதியொன்று 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பான கட்டுநிதி அடுத்துவரும் வருடத்தின் சனவரி 10 ஆந் திகதி அல்லது மாகாணத் திறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதியில் மீள தீர்த்து வைக்காமை தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி திணைக்களத்திற்குரிய 03 வாகனங்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது 05 சந்தர்ப்பங்களில் விபத்திற்கு உட்பட்டதனால் கூட்டுமொத்தமாக ரூபா 2,498,180 நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வடமத்திய மாகாண நிதி விதி 54.1.6 இன் பிரகாரம் அந்த விபத்துக்களுக்கு பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்கண்டு நட்டங்களை அறவிடுவதற்காக | ஏற்றுக்கொள்கின்றோம். | விபத்துக்களுக்கு பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்கண்டு வடமத்திய மாகாண நிதி விதி 54.1.6 இன் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் ஒரு வெற்றிடம், மூன்றாம் நிலையில் 07 வெற்றிடங்கள் மற்றும் இரண்டாம் நிலையில் 47 வெற்றிடங்களும் ஆக 55 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

**1.5.6 தலைப்பு 612 - வடமத்திய மாகாண கல்வி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் விடய இலக்கம் 61211 (அலுவலக பதவியணியினர்) என்ற அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண சபையின் அமைச்சு / திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 46 உத்தியோகத்தர்கள், ஏனைய மாகாண சபைகளின் மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 08 உத்தியோகத்தர்கள், சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது மரணமடைந்த 03 உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்றுச் சென்றுள்ள 13 உத்தியோகத்தர்கள், சேவையை | ஏற்றுக்கொள்கின்றோம். | தாபன விதிக் கோவை மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(உ) பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைவிட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தர் மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர் ஆகியோர்களுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 3,771,986 கடன் மீதியொன்று 03 மாதங்களுக்கும் 07 வருடங்களுக்கும் இடையிலான காலம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. அவ்வாறே வடமத்திய மாகாண சபையின் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களிலிருந்து இடமாற்றலாகி வருகை தந்த 08 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 1,123,933 கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 மாதங்களுக்கும் 07 வருடங்களுக்கும் இடையேயான காலம் எடுத்திருந்தது. எனினும் அந்தக் கடன் மீதியில் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1:6, 1:7, 4:2:2, 4:2:4, 4:2:5, 4:5, 4:6 மற்றும் 6:3 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(உ) பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் விடய இலக்கம் 61201 (பாடசாலை பதவியணியினர்) என்ற அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண சபையின் அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு | ஏற்றுக்கொள்கின்றோம். | தாபன விதிக் கோவை மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் |

இடமாற்றலாகிச் சென்ற 101 உத்தியோகத்தர்கள், ஏனைய மாகாண சபைகளின் மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 478 உத்தியோகத்தர்கள், மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு இடமாற்றலாகிச் சென்ற 119 உத்தியோகத்தர்கள், சேவையாற்றும் போது மரணமடைந்த 19 உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்றுச் சென்றுள்ள 180 உத்தியோகத்தர்கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட 19 உத்தியோகத்தர்கள், சேவையை கைவிட்டுச் சென்ற 18 உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாடு சென்றுள்ள ஒரு உத்தியோகத்தர் ஆகியோர்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 49,399,567 கடன் மீதி 03 மாதங்களுக்கும் 24 வருடங்களுக்கும் இடையிலான காலம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. அவ்வாறே வடமத்திய மாகாண சபையிலிருந்து ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வருகை தந்த 03 உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய மாகாண சபைகளின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வருகை தந்த 14 உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்குரிய ரூபா 924,670 கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 மாதங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தது. எனினும் அந்தக் கடன் மீதியை தாபன

03(உ) பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1:6, 1:7, 3:18, 4:2:2, 4:2:4, 4:2:5, 4:5, 4:6 மற்றும் 6:3 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(உ) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கெக்கிராவ, தமுத்தேகம மற்றும் கலன்பிந்துனுவெவ கல்வி வலயங்களுக்குரிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு மாணவர் உதவித் தொகை செலுத்துவதற்காக கிடைத்திருந்த கூட்டுமொத்தமாக ரூபா 603,450 தொகையை மாணவர்களுக்கு செலுத்துவதற்கோ அல்லது மீள அனுப்பி வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் 06 மாதங்கள் முதல் 21 மாதங்கள் வரையிலான காலம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகள் அண்மித்த போது மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருகை தராமையால் மாணவர் உதவித் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | கிடைக்கப் பெற்ற மாணவர் உதவித் தொகைகளை மாணவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கெக்கிராவ கல்வி வலயத்தில் பளுகஸ்வெவ, பலாகல, திறப்பனை பிரிவு கல்வி அலுவலகங்களுக்குரிய பாடசாலைகளில் 2019 ஆம் ஆண்டில் கல்வி கா.பொ.த (சாதாரண தரம்) ஆங்கில பாடத்தில் சித்தி பெறாத சதவீதம் முறையே 56, 53, 49 ஆகவும், கணித பாடத்தில் சித்தி பெறாத சதவீதம் 41, 37, 35 ஆகவும் ஆன ஆகக்கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது. மாணவர்களின் சித்தி பெறாமை சதவீதத்தை குறைப்பதற்காக | ஏற்றுக்கொள்கின்றோம். | ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் மாணவர்கள் சித்தி பெறாமைக்கான சதவீதத்தைக் குறைப்பதற்காக பிரயோக ரீதியலான வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரயோக ரீதியிலான வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (உ) | வெலிக்கந்த பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டில் உயர்தர பரீட்சையில் வெலிக்கந்த பிரிவில் பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழக தகைமை பெற்ற 61 மாணவர்களுக்காக நிதி உதவி வழங்குவதற்கு திம்புலாகல வலய கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 226,000 தொகையில் 2021 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 66,000 பணம் உரிய மாணவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பிரதேச சபையினால் பல்கலைக்கழக தகைமை பெற்ற மாணவர்களுக்கு வழங்குவதற:கு கையளிக்கப் பட்டிருந்த பணம் உரிய மாணவர்களுக்கு வழங்கப்படாமை க்கான காரணத்தை ஆராய்ந்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கெக்கிராவ வலயக் கல்வி அலுவலகம், 05 பிரிவுக் கல்வி அலுவலகங்கள், கெக்கிராவ ஆசிரியர் நிலையம் மற்றும் 125 பாடசாலைகள் என்பவற்றுக்குரிய காணிகளின் அளத்தல் நடவடிக்கைகள் மேற்கொண்டு வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஹிங்குரக்கொட வலய அலுவலகத்திற்குரிய 78 பாடசாலைகளுக்குரிய காணிகளுக்காக அனுமதிப் பத்திரம் / உரித்துறுதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | சகல பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களின் காணிகளுக்காக அனுமதிப்பத்திரம் / உரித்துறுதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட சில பதவிகளில் 201 வெற்றிடங்கள் மற்றும் சில பதவிகளில் 76 மிகையும் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைப் பதவியணியினரை அகற்றுவதற்காகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | தமுத்தேகம, கெக்கிராவ, ஹிங்குரக்கொட, பொலன்னறுவை மற்றும் கலன்பிந்துனுவெவ கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 28 ஆசிரியர்கள் 1993 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அரசாங்கத்தின் ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே அவர்களின் சேவையை பெற்றுக் கொண்ட நிறுவனங்களில் இருந்து சேவைக்கு வருகை தரும் அறிக்கை பெறப்படாமல் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் அந்த ஆசிரியர்களுக்கு சம்பளமாக ரூபா 51,546,748 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த சம்பளம் உரிய நிறுவனங்களில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | ஆசிரியர்கள் ஏனைய பணிகளுக்காக விடுவிப்பததை கைவிடுதல், விடுவிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை மீளப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பளங்களை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | தம்புத்தேகம, கெக்கிராவை, பொலன்னறுவை, திம்புலாகல மற்றும் கெப்பிற்றிகொல்லாவ கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 04 வருடங்கள் முதல் 31 வருடங்கள் வரையிலான காலம் சேவையாற்றுகின்ற 194 ஆசிரியர்களின் தகைமைகாண் காலத்தில் விசேட சுகயீன விடுமுறை பெற்றுக் கொள்ளல், பயிற்சி நியமனக் கடிதத்தில் பெயர் மாற்றம், தகைமைகாண் அறிக்கை வழங்காமை அல்லது தாமதமடைந்தமை, மருத்துவ அறிக்கைகளில் குறைபாடுகள் காணப்பட்டமை, கா.பொ.த உயர்தரம், பட்டதாரி மற்றும் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்களில் பெறுபேறுகள் உறுதிப்படுத்திக் கொள்ளாமை போன்ற காரணங்களினால் சேவை நிரந்தரமாக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | காணப்படுகின்ற குறைபாடுகளை விரைவாக சரிசெய்து தகைமைகாண் காலம் முடிவடைந்தவுடன் உடனடியாக சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | தழுத்தேகம, கெக்கிராவ மற்றும் கலன்பிந்துனுவெவ கல்வி வலயங்களின் மகா வித்தியாலயங்களில் பிரதி அதிபர்களாக சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற தரமுள்ள அதிபர்கள் வெற்றிடமாக காணப்படுகின்ற பாடசாலைகளில் அதிபர்களாக நியமிக்கப்படாமல், 115 ஆசிரியர்கள் பதில் கடமை அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். | ஏற்றுக்கொள்கின்றோம். | தரமுள்ள அதிபர்களை வெற்றிடங்கள் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு நியமித்து, ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்புதல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் இறுதியில் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட சில பதவிகளில் 2515 வெற்றிடங்கள் மற்றும் 93 மிகைகள் காணப்பட்ட போதிலும், வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கும் மற்றும் மிகை ஊழியர்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் மிகை ஊழியர்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | கெக்கிராவ கல்வி வலயத்தில் மாகாண சபை பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற 193 ஆசிரியர்கள் 05 வருட காலங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் ஒரே பாடசாலையில் சேவையாற்றுகின்ற போதும் அவர்கள் வெற்றிடமாக காணப்படுகின்ற ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | இடமாற்றல் திட்ட முறைமையின் பிரகாரம் பாடசாலைகளுக் கிடையே ஆசிரியர்களை இடமாற்றுதல் வேண்டும். |
| (க) | கெப்பிற்றிகொல்லாவ கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்காக ஆய்வுகூட உதவியாளர், பாடசாலை அலுவலக உதவியாளர் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோர்களின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 104 ஆக இருந்த போதும் அந்த எண்ணிக்கையை | ஏற்றுக்கொள்கின்றோம். | மிகை ஊழியர்கள் வெற்றிடமாக காணப்படுகின்ற ஏனைய வலயங்களுக்கு அனுப்பப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்சி 71 ஊழியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (கா) | கலன்பிந்துனுவெவ கல்வி வலயத்தில் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி பாடசாலைகளின் பாடங்களின் பிரகாரம் ஆசிரியர் வெற்றிடங்கள் முறையே 102 மற்றும் 52 ஆகவும், ஆசிரியர்களின் மிகை முறையே 202 மற்றும் 24 ஆகவும் காணப்பட்டதுடன் மிகை ஊழியர்கள் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு அனுப்பி மனிதவளத்தை செயற்திறனாக முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | மிகை ஆசிரியர்கள் வெற்றிடம் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு அனுப்பப்படல் வேண்டும். |

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு** | **இணங்கா மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| | ----------------------- | ----------------------- | -------------------------------- | ----------------------- |
| (கி) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 10,909,412 ஆக இருந்ததுடன் 02 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,431,755 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் | ஏற்றுக்கொள்கின்றோம். | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்பாளர்களிடம் விசாரணை செய்து மீளச் செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரகாரம் மீளச் செலுத்து வதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | | |
| (கீ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத் தின் 13.3 ஆம் பிரிவு | உள்ளபடியான பதவி நியமிக்கப்படும் வரை தற்காலிக பதிலீடாக பதிற்கடமை வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் திம்புலாகல கல்வி வலயத்தில் அதிபர் பதவிகளுக்காக 1½ வருடம் முதல் 25 வருடங்கள் வரையான காலம் முதல் 35 ஆசிரியர்கள் பதிற்கடமை அதிபர்களாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | ஏற்றுக்கொள்கின்றோம். | உள்ளபடியான பதவிகளுக்காக முழுநேர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |
| (கு) | அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயல் நடைமுறை விதிக் கோவையின் விதி இலக்கம் 147 | உத்தியோகத் தரின் ஒட்டுமொத்த சேவைக் காலத்தில் தற்காலிகமாக விடுவிக்கக் கூடிய ஆகக்கூடிய காலப்பகுதி 05 வருடங்களாக இருந்த போதும் ஹிங்குராக்கொட | ஏற்றுக்கொள்கின்றோம். | விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை மீளப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் பொலன்னறுவை கல்வி வலயங்களில் 08 ஆசிரியர்கள் ஆசிரியர் சேவையிலிருந்து 06 வருடங்களுக்கும் 16 வருடங்களுக்கும் இடையிலான காலம் இராணுவ சேவைக்கும் மற்றும் சபை உறுப்பினர்களின் பிரத்தியேக பதவியணியினர்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர். | | |

**(கூ) வடமத்திய மாகாண கல்வி அபிவிருத்தி நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கீழே குறிப்பிடப்படுகின்ற கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பிரதான பணிகளுக்காக நிர்வாக சபையினால் மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதியத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக நிர்வாக சபை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் வேண்டும் |
| (i) பாடசாலை மாணவர்கள் தரமான கல்வியை கட்டியெழுப்பும் அபிவிருத்தி செயற்திட்டத்தை தயாரித்து அமுல்படுத்துதல். | | |
| (ii) குறைந்த வருமானம் பெறுகின்ற திறமைகளை பூர்த்தி செய்த பிள்ளைகளுக்கும் தேசிய மட்டத்தில் பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றை அடைவதற்காக | | |

மாணவர்களுக்கான கல்வியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக புலமைப் பரிசில் திட்டமொன்றை ஏற்படுத்துதல்.

(iii) பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

**1.5.7 தலைப்பு 620 - வடமத்திய மாகாண விவசாய, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண விவசாய அமைச்சிற்குரியதாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 1,072,848 கட்டுநிதி மீதி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்ட கட்டுநிதி மீதி அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதியில் அல்லது மாகாண திறைசேரியினால் தீர்மானிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் மீள தீர்க்கப்படாமை தொடர்பாக பரிசோதனையொன்று சரியான பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வடமத்திய மாகாண விவசாய அமைச்சில் இரண்டாம் நிலையில் 30 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 02 வெற்றிடங்கள் என 32 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.8 தலைப்பு 622 - வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 17 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 04 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 48 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 29 வெற்றிடங்கள் ஆக 98 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 630 - வடமத்திய மாகாண சுகாதார சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, சுற்றாடல் மற்றும் மாகாண சபை அலுவல்கள் அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண சுகாதார அமைச்சில் சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 11 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் ஒரு வெற்றிடமும் ஆக 16 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.10 தலைப்பு 631 - வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்முத்தேகம மற்றும் கெப்பிற்றிகொல்லாவ என்ற இரண்டு வைத்தியசாலைகளிலும் இரத்த சுத்திகரிப்பு அலகு பொதுமக்களின் உரித்துக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவத்தின் குறைபாடுகளின் அடிப்படையில் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த 02 வைத்தியசாலைகளுக்காக வழங்கப்பட்ட 08 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களையும் உள்ளடக்கி செலவிடப்பட்டிருந்த ரூபா 90.8 மில்லியன் தொகையில் சிறுநீரக நோயாளர்களுக்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் எந்தவொரு சிகிச்சையும் வழங்கப்படாதிருந்ததுடன் அந்த கட்டிடம் மற்றும் உபகரணங்கள் பயன்பாடின்றி காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றோம். | இரத்த சுத்திகரிப்பு அலகை ஆரம்பிக்க முடியாமைக்கு தாக்கமளித்த முகாமைத்துவ குறைபாடுகளை மாற்றியமைத்து அந்த அலகுகளிலிருந்து சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குதலை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2009 மார்ச் 27 ஆந் திகதிய 02/19/2009 ஆம் இலக்க சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 04(xiv) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் மேலதிக சேவைப் படி உத்தியோகத்தரின் மாதாந்த | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும். | ஒவ்வொரு உத்தியோகத்த ரினதும் மேலதிக சேவைப் படி உத்தியோகத்தரின் மாதாந்த சம்பள எல்லையினை விஞ்சுமாயின் அதற்காக 2009 மார்ச் 27 ஆந் திகதிய 02/19/2009 |

| | | | |
|---|---|---|---|
| | சம்பள எல்லையினை விஞ்சுமாயின் அதற்காக சுகாதார அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | | ஆம் இலக்க சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சுகாதார அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | அனுராதபுர பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 11 சந்தர்ப்பங்களின் போது உதிரிப்பாகங்கள் புதிதாக ஈடுபடுத்தி வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,469,042 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த பழுதுபார்த்தல்களின் போது அகற்றப்பட்ட எஞ்சின் தலை, றேடியேற்றர் கூலர், எயார் கண்டிசன் கூலர் போன்ற உதிரிப்பாகங்கள் களஞ்சிய பொறுப்பு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | பழுதுபார்த்தலின் பின்னர் அகற்றப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் களஞ்சியத்திற்கு வழங்கப்படல் வேண்டும். |
| (ஈ) | விசேட நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள் 24 பேர் மற்றும் ஏனைய வைத்திய உத்தியோகத்தர்கள் 124 பேர்களை உள்ளடக்கிய வைத்தியசாலை பதவியணியினரில் காணப்பட்ட வெற்றிடங்கள் 1032 இனையும், வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பதவியணியினரில் காணப்பட்ட வெற்றிடங்கள் 64 இனையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

## 1.5.11 தலைப்பு 632 - வடமத்திய மாகாண ஆயர்வேத திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மருந்துகளை பயிரிடுவதன் மூலம் மருந்துகளுக்கான பற்றாக்குறையை மாற்றியமைத்து நியமத்தையுடைய தரமான மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குதல், மாகாணத்தில் 10 மருந்து தோட்டங்களை ஏற்படுத்துதல், மருந்து மரங்களின் பயிர்ச் செய்கை மற்றும் ஆயர்வேத மருந்து உற்பத்தி அபிவிருத்தி என்பன வடமத்திய மாகாண ஆயர்வேத திணைக்களத்தின் நோக்கமாக இருந்த போதும் அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்தமை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உலர்ந்த மருந்து கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 46 மில்லியன் மற்றும் ரூபா 34 மில்லியன் தொகைகள் வெளிவழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தமையினால் வெளிப்படுத்தப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மருந்துகளை பயிரிடுவதன் மூலம் நியமத்தையுடைய தரமிக்க மருந்துகளை உற்பத்தி செய்து மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக செலவாகின்ற செலவினங்கள் குறைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண ஆயர்வேத திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போதும் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கும் மற்றும் அந்த இலக்கினை அடைந்து கொள்ளும் வகையில் நிதியேற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிறைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்த இலக்குகளை நிறைவேற்றும் வகையில் நிதியேற்பாட்டினை ஒதுக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண ஆயர்வேத திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 21 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் ஒரு வெற்றிடம், இரண்டாம் நிலையில் 109 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 47 வெற்றிடங்களும் ஆக 178 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு** | **இணங்கா மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| | ------------------------ | ------------------------ | ------------------------ | ------------------------ |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண ஆயர்வேத திணைக்களத்தி ற்குரிய பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 8,097,102 ஆக இருந்ததுடன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த ரூபா 20,826 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மீளச் செலுத்துவத | ஏற்றுக்கொள்கின்றோம். | 02 வருட காலத்தை விஞ்சியிருந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்பாளர்களிடம் விசாரணை செய்து மீள செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | | |

### 1.5.12 தலைப்பு 633 - வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தில் மூன்றாம் நிலையில் ஒரு வெற்றிடம், இரண்டாம் நிலையில் 39 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 34 வெற்றிடங்களும் ஆக 74 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.13 தலைப்பு 634 - வடமத்திய மாகாண சமூக சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்குரிய சாலியபுர சாந்தி முதியோர் இல்லத்தில் சமூக சேவை உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், பெண்தாதி, பராமரிப்பாளர், சமையற்காரர், சுகாதார தொழிலாளர்களை உள்ளடக்கிய 09 பதவிகளில் காணப்படுகின்ற 28 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமையினால் தரமான சேவையொன்றை வழங்குவதற்கு இடையூறாகக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

**1.5.14 தலைப்பு 640 - வடமத்திய மாகாண கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமத்திய மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக நடவடிக்கை எடுக்கின்ற 03 வருமான குறியீடுகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 783,256,000 ஆக இருந்த போதும், உள்ளபடியான வருமானம் ரூபா 695,820,078 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் மிகை மதிப்பீட்டு பெறுமதி ரூபா 87,435,922 ஆக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 11 சதவீதம் ஆகும். | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமான மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் உள்ளபடியான வருமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுமாயின் மதிப்பீடு வருமான திருத்தப்படல் வேண்டும். |

**1.5.15 தலைப்பு 641 - வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 இன் 01 ஆம் இலக்க வடமத்திய மாகாண கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மாகாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்களின் நிதிக் கூற்றுக்கள், கணக்காண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் பெறப்பட்டு அவற்றை கணக்காய்வு செய்து அறிக்கை விநியோகித்தல் வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதும், வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள | ஏற்றுக்கொள்கின்றோம். | 2011 இன் 01 ஆம் இலக்க வடமத்திய மாகாண கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கணக்காய்வு செய்த அறிக்கையை விரைவாக விநியோகித்தல் வேண்டும். இந்த கடமைகளுக்கான |

| | | | |
|---|---|---|---|
| | 682 கூட்டுறவுச் சங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2152 நிதிக் கூற்றுக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | தாமதத்திற்கு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாணத்தில் பதிவு செய்துள்ள 682 கூட்டுறவு சங்கங்களில் 497 சங்கங்கள் 10 வருடங்களாக செயற்பாடற்றுக் காணப்பட்ட போதும், வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் அவற்றை மீள்கட்டமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயற்பாடற்றுக் காணப்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்களை மீள் கட்டமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 62 மற்றும் ஆரம்ப நிலையில் 04 வெற்றிடங்களும் ஆக 72 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

## 1.5.16 தலைப்பு 642 - மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தால் செயற்படுத்தப்படுகின்ற தச்சு பாடசாலை வணிக முற்பணக் கணக்கில் செயற்பாட்டு நட்டமொன்று ஏற்படும் முறையில் செயற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் செயற்பாட்டு நட்டம் முறையே ரூபா 6,786,822 தொகை, ரூபா 481,564 மற்றும் ரூபா 1,510,357 ஆக காணப்பட்டது. | உற்பத்தி அதிகரித்திருந்த போதும் விற்பனை குறைவடைந்திருந்தது. இறுதி பூர்த்தி இருப்பு அதிகரித்துச் சென்றதன் காரணமாக நட்டம் அதிகரித்திருந்தது. | முற்பணக் கணக்குகள் இலாபம் பெறும் நிலையினை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் விஸ்கம் பியச கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற 22 கண்காட்சி கடைகளிலிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 1,111,105 தொகையான வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்தக் கடை வாடகையை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கடை வாடகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் ஒரு வெற்றிடம், இரண்டாம் நிலையில் 27 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 17 வெற்றிடங்களும் ஆக 45 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

## 1.5.17 தலைப்பு 643 - வடமத்திய மாகாண விளையாட்டுத்துறை திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 661,344 பெறுமதியான விளையாட்டு வீரர்களின் பிரயாண உறைகள் மற்றும் பாதணி இருப்புக்களும் 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 266,785 பெறுமதியான விளையாட்டு உடை இருப்புக்களும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 68 ரீ சேட்டுக்களும் பெறுமதி இனங்காண்பதற்கு முடியாதிருந்த 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உடை இருப்பும் மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 14 பிரயாண உறைகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | முறையான திட்ட முறைமையின் பிரகாரம் தேவை காணப்படுகின்ற விளையாட்டு சமூகம் அல்லது பாடசாலைகளுக்கு குறித்த அறிக்கையினை பேணி இந்தப் பொருட்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் பதவி மற்றும் உதவி விளையாட்டுத்துறை பணிப்பாளர் (தொழில்நுட்ப) பதவி என்பன 2018 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும், அந்த பதவிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட 20 விளையாட்டு பயிற்சியாளர் பதவிகளில் 05 அதாவது 25 சதவீதம் மீளாய்வாண்டின் போது வெற்றிடமாக காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண விளையாட்டுத்துறை திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 05 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 10 வெற்றிடங்களும் ஆக 17 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 650 - வடமத்திய மாகாண காணி, நீர்ப்பாசன, பெருந்தெருக்கள், வீடமைப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண நீர்ப்பாசன அமைச்சிற்குரியதாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 302,158 கட்டுநிதி மீதியொன்று 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்ட கட்டுநிதி மீதி அடுத்து வரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதி அல்லது திறைசேரியினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் மீள தீர்க்கப்படாமை தொடர்பாக பரிசோதனையொன்று |

| | | |
|---|---|---|
| | | மேற்கொண்டு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண காணி, நீர்ப்பாசன, பெருந்தெருக்கள், வீடமைப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சில் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள் மற்றும் இரண்டாம் நிலையில் 32 வெற்றிடங்களும் ஆக 34 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

## 1.5.19 தலைப்பு 652 - மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணி மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் வடமத்திய மாகாண காணி ஆணையாளரினால் ரூபா 112,000,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், உள்ளபடியான வருமானம் ரூபா 169,768,129 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் குறை மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 57,768,129 ஆக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 52 சதவீதமாக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமான மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உள்ளபடியான வருமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் இடையே முரண்கள் ஏற்படுமாயின் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கிழக்கு நுவரகம்பலாத்த மற்றும் கெக்கிராவ பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் | ஏற்றுக்கொள்கின்றோம். | அரசாங்கத்தின் காணி தொடர்பான செயற்கோவை ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் மாகாண காணி ஆணையாளரினால் நீண்ட கால வாடகை அடிப்படையில் சேகரிக்கப்பட வேண்டிய காணி வரி முறையே ரூபா 285,138,949 தொகை மற்றும் ரூபா 11,529,373 தொகைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டதுடன் அரசாங்கத்தின் காணி தொடர்பான செயற்கோவையின் 10 ஆவது தொகுதியின் 89 ஆம் பிரிவு மற்றும் 11 ஆவது தொகுதியின் 104 முதல் 125 ஆம் பிரிவுகளின் பிரகாரம் காணி வரி செலுத்துதல் தாமதமடைதல் அல்லது கொடுப்பனவுகள் புறக்கணித்தல் தொடர்பாக காணியிலிருந்து வெளியேற்றுதல், வழக்குத் தொடர்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் இந்த வரி அறவிடுதல் நலிவான நிலையில் காணப்பட்டமைக்கு காரணமாக இருந்தது. | | பிரகாரம் காணி வரி செலுத்ததல் தாமதிக்குமாயின் அல்லது கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்படுமாயின் அது தொடர்பாக காணியிலிருந்து வெளியேற்றுதல், வழக்குத் தொடருதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 03 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 14 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 04 வெற்றிடங்களும் ஆக 21 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

## 1.5.20 தலைப்பு 660 - வடமத்திய மாகாண பிரதம செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருமான குறியீடுகளுக்குரிய வடமத்திய மாகாண பிரதம செயலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 378,000,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 521,076,034 ஆகும். அதன் பிரகாரம் அந்த 05 வருமான குறியீடுகளுக்கும் உரியதாக தயாரிக்கப்பட்ட பற்றாக்குறை மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 143,076,034 ஆக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 38 சதவீதம் ஆகும். | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமான மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் உள்ளபடியான வருமானத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் இடையே முரண்கள் ஏற்படுமாயின் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வருமானக் குறியீடு 2006.02.00 இன் கீழ் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத மூலதன பொருள் விற்பனை வருமானம் வடமத்திய மாகாண பிரதம செயலாளரால் ரூபா 21,000,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானத்தை ரூபா 18,129,939 இனால் விஞ்சியிருந்தது.<br>மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானம் ரூபா 2,997,078 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் மிகை மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,002,922 ஆகும். அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 86 சதவீதம் ஆகும். | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானம் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் தொடர்பாக கவனத்தில் கொண்டு மீளாய்வாண்டின் வருமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தராக சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் | ஏற்றுக்கொள்கின்றோம். | 1971 இன் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1969 |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் விடுதியொன்றில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் குடியிருந்து வருவதுடன் அந்த உத்தியோகத்தர் 2017 மார்ச் மாதத்தின் போது ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். எனினும், 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் அதிலிருந்து வெளியேறியிருக்கவில்லை. | | இன் 07 ஆம் இலக்க அரசாங்க இல்லங்கள் (உரித்தனை மீளப் பெற்றுக் கொள்ளுதல்) சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந்த வீட்டிலிருந்து அகற்றுதல் மற்றும் 05 வருட கால வாடகைக் காலத்தை விஞ்சிய அந்த வீட்டில் குடியிருக்கின்ற காலப்பகுதிக்காக பொதுவான வீட்டு வாடகைக்கு மேலதிகமாக தண்ட வாடகையும் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் இல்லமொன்றில் 05 வருட வாடகைக் காலத்தை விஞ்சி 02 வருடங்களும் 08 மாத காலமும் மாகாண இறைவரி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் குடியிருந்து வருகின்றார். அவ்வாறே, உப நிரற்படுத்தப்பட்ட இல்லம் அல்லாத இந்த அரசாங்கத்தின் இல்லத்தில் வாடகைக் காலம் 05 வருடங்களை விஞ்சியிருந்த போது தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகைக் காலத்தை விஞ்சிய அந்த இல்லத்தில் குடியிருந்து வருகின்ற காலப்பகுதிக்காக பொதுவான வீட்டு வாடகைக்கு மேலதிகமாக தண்ட பண வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து அகற்றப்பட வேண்டியிருந்ததுடன் 05 வருட கால வாடகைக் காலத்தை விஞ்சி குடியிருந்து வருகின்ற காலப் பகுதிக்காக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுவான வீட்டு வாடகைக்கு மேலதிகமாக தண்டப்பண வாடகையும் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண பிரதம செயலகத்தில் சிரேஷ்ட நிலையில் ஒரு வெற்றிடம், மூன்றாம் நிலையில் 05 வெற்றிடங்கள் மற்றும் இரண்டாம் நிலையில் 16 வெற்றிடங்களும் ஆக 22 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையில் 04 ஊழியர்கள் மிகையாக காணப்பட்டனர். எனினும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும், மிகை உத்தியோகத்தர்களுக்காக பொருத்தமான வழிமுறைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை ஊழியர்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்கா மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியிரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண பிரதம செயலகத்திற் குரிய பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 17,526,084 ஆக இருந்ததுடன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை கொண்டிருந்த ரூபா 119,000 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மீள | ஏற்றுக்கொள்கின்றோம். | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்பாளர்களிடம் விசாரணை செய்து மீளச்செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்துவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 1.5.21 தலைப்பு 662 - வடமத்திய மாகாண திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் மாகாண திட்டமிடல் திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 14 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் ஒரு வெற்றிடம் என்பவற்றை உள்ளடக்கிய 17 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போதும் அந்த வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

## 1.5.22 தலைப்பு 665 - வடமத்திய மாகாண இறைவரித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 03 வருமானக் குறியீடுகளுக்குரிய வடமத்திய மாகாண இறைவரி ஆணையாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 249,000,000 ஆக இருந்த போதும் உள்ளபடியான வருமானம் ரூபா 210,413,156 ஆகும். அதன் பிரகாரம் மிகை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 38,586,844 ஆக இருந்ததுடன் அது மதிப்பீடு | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதி விதியின் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் உள்ளபடியான வருமானத்திற்கும் மதிப்பீட்டு வருமானத்திற்கும் இடையே முரண்கள் காணப்படுமாயின் வருமான மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட வருமானத்தில் 16 சதவீதம் ஆகும். | | திருத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வருமானக் குறியீடு 2003.03.01 இன் கீழ் நீதிமன்ற தண்டப்பண வருமானம் வடமத்திய மாகாண இறைவரி ஆணையாளரினால் ரூபா 240,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது உள்ளபடியான வருமானத்தை விட ரூபா 156,128,772 தொகை குறை மதிப்பீடாகும். அந்த குறை மதிப்பீடு மதிப்பீடுசெய்யப்பட்ட வருமானத்தில் 65 சதவீதமாகும். | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதி விதியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் என்பவற்றை கவனத்தில் கொண்டு சரியாக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண இறைவரித் திணைக்களத்தில் சிரேஷ்ட நிலையில் 11 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் ஒரு வெற்றிடம், மற்றும் ஆரம்ப நிலையில் ஒரு வெற்றிடமும் ஆக 15 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.23 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 49,661,220 கிரயமான கட்டிடங்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்துறுதி அல்லது கையளித்தல் | ஏற்றுக்கொள்கின்றோம். | உரித்தை உறுதிப் படுத்துவதற்கான காணிகளின் உரித்துறுதி அல்லது கையளித்தல் சான்றிதழ் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றிதழ் மாகாண வீதி அதிகார சபையிடம் காணப்படவில்லை. | | |
| (ஆ) | வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுமதிசேர் வரி கோவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2015 செப்தெம்பர் மாதம் முதல் செயற்பாடற்ற நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் போது பெறுமதிசேர் வரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 7,361,498 தொகையான பெறுமதிசேர் வரி அறவிடப்பட்டிருந்ததுடன் அந்த பணம் மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | முறையான அதிகாரமின்றிய பெறுமதிசேர் வரி மீள செலுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சிரேஷ்ட நிலையில் 04 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 05 வெற்றிடங்கள், மற்றும் இரண்டாம் நிலையில் 03 வெற்றிடங்களும் ஆக 12 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.24 வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிப் பயணிகள் போக்குவரத்து | ஏற்றுக்கொள்கின்றோம். | அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | சேவை அதிகார சபையின் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கையை பதிவதற்காக பொருத்தப்பட்டுள்ள கைவிரல் அடையாள இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | | ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 42,612,200 தொகையான பற்றாக்குறை 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 56,426,500 பற்றாக்குறை வரை அதிகரித்திருந்தமையால் 2015 திசெம்பர் 09 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதியமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மிகையூதிய படியாக ரூபா 2,000 வீதம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதிகார சபையினால் அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 120 ஊழியர்களுக்கு ரூபா 5,000 வீதம் ரூபா 600,000 மிகையூதிய படியாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதியமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மிகையூதிய படியாக ரூபா 2,000 வீதம் செலுத்த வேண்டியிருந்ததுடன் மேலதிக செலுத்துகைகள் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 1994 இன் 08 ஆம் இலக்க வீதி பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை தாபித்தல் விஞ்ஞாபனத்தின் II ஆம் பகுதியின் 6.1(ஆ) பந்தியின் பிரகாரம் வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு மாகாணத்திற்குள் பிரயாணிகள் போக்குவரத்திற்காக பேருந்து வண்டிகளை பயன்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு மாத்திரம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், அதற்கு முரணாக 2000 ஆம் ஆண்டு முதல் | ஏற்றுக்கொள்கின்றோம். | 1994 இன் 08 ஆம் இலக்க வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை தாபித்தல் விஞ்ஞாபனத்தின் II பகுதியின் 6.1(ஆ) பந்தியின் பிரகாரம் வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு மாகாணத்திற்குள் பிரயாணிகள் போக்குவரத்திற்காக பேரூந்து வண்டிகளை |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது தற்போதைய பெறுமதி ரூபா 16,700,000 தொகையான மாகாணங்களுக்கு இடையிலான 167 வீதி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 72 அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடிக் காலமும் நீடிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்தது. | | பயன்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் அந்த அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு மாத்திரம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மையால் அதற்கு இணங்காத நடவடிக்கைகள் தொடர்பாக ஈடுபட்ட நபர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாகாணங்களுக்கு இடையிலான மற்றும் மாகாண வீதி அனுமதிப்பத்திரம் உரித்தான பேரூந்து வண்டிகளுக்காக விநியோகிக்கப்பட்ட 62 தண்டப்பண பத்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,370,300 தொகையான தண்டப்பணம் மற்றும் தாமதக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு வீதி பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | 1994 இன் 08 ஆம் இலக்க வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை தாபித்தல் விஞ்ஞாபனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாணங்களுக்கு இடையிலான வீதிகள் மற்றும் மாகாண வீதி அனுமதிப்பத்திரம் உரித்தான பேருந்து வண்டிகளுக்காக விநியோகிக்கப்பட்ட தண்டப்பண பத்திரங்களுக்காக தண்டப்பணம் மற்றும் தாமதக் கட்டணம் என்பன அறவிடப்படல் வேண்டும். |

## 1.5.25 வடமத்திய மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் அதிகார சபைக்காக கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்படாமல் பதிற் கடமை கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 144,000 பதிற்கடமை படியாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | முறையான பிரகாரம் பதவி அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் பதில்கடமை படிகள் மீள அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்கள் முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்திய நிலையில் காணப்பட்ட 17 விற்பனை முகவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 571,830 செயல்முன்னேற்ற அறிக்கை விற்பனை வருமானம் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | 03 வருடங்கள் முதல் அறவிடப்படாமல் காணப்படுகின்ற விற்பனை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 04 வருடங்கள் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்ட ரூபா 3,000,000 தொகையான ஆசிரியர் படிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | 04 வருடங்கள் முதல் ஆசிரியர் படியை தீர்த்து வைக்காமைக்கான காரணத்தை பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 28 விற்பனை முகவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,942,292 தொகையான பத்திரிகை வருமானத்தில் ரூபா 5,391,779 தொகையான வருமானம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பத்திரிகை வருமானத்தை அறவிடாமைக்கான காரணம் பரீட்சிக்கப்பட்டு பெற வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு குறித்துரைத்த காலத்தின் போது பங்களிப்புப் பணம் செலுத்தாமையின் காரணமாக ரூபா 437,852 தொகையான மிகைக் கட்டண அறிவித்தலொன்று விதிக்கப்பட்டிருந்ததுடன் அதனை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ அல்லது செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தை குறித்துரைத்த காலத்தின் போது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் களிடமிருந்து உரிய மிகைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகார சபையில் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் ஒரு வெற்றிடம் மற்றும் இரண்டாம் நிலையில் 11 வெற்றிடங்கள் என 14 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |

### 1.5.26 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிட வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 16,011,120 கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் ரூபா 8,966,846 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரித் தொகை என்பவற்றை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் பொருட்கள் சேவைகள் வரி (GST) என்பவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 8,029,065 சம்பளம் மற்றும் படிகளாக முகவராண்மையினால் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மிகை பதவியணியினர் அகற்றப்படல் வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டியிருந்த இயந்திர வாடகை வருமானம், அச்சிடல் வருமானம் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல் பிரிவின் வருமானம் முறையே ரூபா 2,795,558 தொகை, ரூபா 31,294,850 மற்றும் ரூபா 2,556,908 என்பன அறவிடப்படாமல் காணப்பட்டது. அதில் முறையே 47 சதவீதமான ரூபா 1,304,135 தொகை, 23 சதவீதமான ரூபா 7,261,712 மற்றும் 60 சதவீதமான ரூபா 1,542,131 தொகைகள் என்பன அறவிடப்படாமல் காணப்பட்ட காலம் 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையான வீச்சில் இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | அறவிடப்படாமைக் கான காரணத்தை கண்டறிவதற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | நிர்மாண செயற்திட்டங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் மற்றும் குழாய் கிணறு செயற்திட்டத்திற்காக கிடைக்க வேண்டிய பணம் முறையே ரூபா 8,527,044 மற்றும் ரூபா 3,159,160 ஆக இருந்ததுடன் அந்த வருமானம் 06 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவையாக இருந்தமைக்கான காரணங்களை கண்டறிவதற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கடந்த பல வருடங்கள் முதல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு காணப்படுகின்ற கூட்டுத்தொகையான ரூபா 18,977,029 ஆன செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம், செலுத்த வேண்டிய இயந்திர வாடகை மற்றும் செலுத்த வேண்டிய உதிரிப் பாகங்கள் மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் என்பவற்றை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கின்றோம். | சகல பொறுப்புக்களையும் தீர்த்து வைப்பதற்கோ அல்லது உள்ளபடியான பொறுப்புக்கள் காணப்படாதிருக்குமாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |